1991 அக்டோபர் 3]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித்தேவர் அவர்கள் சொல்வதுபோல் குறைந்த அளவு ஊதியம் கொடுக்கின்ற காரணத்தினாலே சில வழக்கறிஞர்கள் போதுமான அளவிற்கு திறமை இல்லாதவர்கள் வருகிறார்கள். எனவே சரியாக வழக்குகள் நடைபெறவில்லை என்ற விவரங்களும் அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கின்றன. எனவே வழக்கறிஞர்களுக்கு தகுதியின் அடிப்படையில் திறமையின் அடிப்படையில் ஆற்றலின் அடிப்படையில் அவர்களுக்குப் போதுமான ஊதியம் கொடுக்க முயற்சி எடுத்து மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித்தேவர் சொன்னதுபோல் இதை உண்மையான ஒரு திட்டமாக ஆக்குவதற்கு அரசு முயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எ. தா. பொன்னுவேலு.

திரு. எ. தா. பொன்னுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களில் கடந்த காலத்திலிருந்து, சேர் போன்ற 'பர்னிச்சர்' இல்லை. அதை இப்போது நம்முடைய புரட்சித் தலைவியினுடைய. . . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பொன்னுவேலு, இதற்கு நீங்கள் தனிக் கேள்வி போடவும், இது இலவச சட்ட உதவியைப் பற்றிய கேள்வி. திரு. சி. ஞானசேகரன்

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வழக்கறிஞர்கள் எல்லாம் வேலையில்லாது இருக்கின்ற காரணத்தால், இலவச சட்ட ஆலோசனை மையங்களில் எல்லாம் ஏற்கெனவே அந்த கோர்ட்டுகளில் வேலை செய்த ரிடையர் ஆன கிளார்க்குகளையே இப்போது அவர்களை அந்த இடங்களிலே ஆபீசர்களாகப் போடுகிறார்கள். அதைத் தவிர்த்து இளம் வழக்கறிஞர்களை அந்தப் பணியிலே அமர்த்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 137.

திரு. சோ. இராசாராமன், மாண்புமிகு கல்வியமைச்சர்.

வாழ்க்கை கிராமத்தில் கிளை நூலகம்.

137—

1078*—திரு. சோ. இராசாராமன் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு **விடையளிப்பாரா**—

[1991 அக்டோபர் 3

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் ஊராட்சி ஒன்றியம், வாழ்க்கை கிராமத்தில் ஒரு கிளை நூலகம் துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), மற்றும் (ஆ): தமிழ்நாடு பொது நூலகச் சட்டத்தின்படி, 5,000 மக்கட்தொகைக்கு மேல் உள்ள கிராமங்களில் தான் கிளை நூலகங்கள் திறக்க இயலும். வாழ்க்கை என்ற இந்தக் கிராமத்தில் உள்ள மக்கள் தொகை 5,000-க்கும் குறைவாகும். இங்கு கிளை நூலகம் திறக்க இயலாது. எனவே அதற்குப் பதிலாக ஒரு பகுதி நேர நூலகம் 14—7—1991 முதல் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

திரு. சோ. இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்ட மன்ற உறுப்பினரான உடனேயே இந்தக் கேள்வியைப் போட்டேன். கிளை நூலகம் அனுமதிக்கப்பட்டு, அந்த நூலகத்தை நானே திறந்து வைத்திருக்கிறேன். அதற்கு கல்வி அமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும் பாராட்டை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 138.

திரு. ச. புரட்சிமணி, மாண்புமிகு கல்வியமைச்சர்.

பெண்ணாடம் நகரில் தொழில் நுட்பக் கல்லூரி.

138—

*1289— **திரு. ச. புரட்சிமணி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் பெண்ணாடம் நகரில் தொழில் நுட்பக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

தற்போது இல்லை,